# கடவுள்



# சிவயோகி

# குறிப்பு

# குறிப்பு

நேற்றும், இன்றும், என்றும், மாறாதது சூன்யம்.

இறைவன்பால் அன்புள்ள மனிதர்கள் சொற்பம்,
பொருளின்பால் அன்புள்ளவர்களே அதிகம்.

இதுவரைக்கும் கடவுள் இப்படி இருக்குமா? என்றே
தேடுகிறார்கள், எப்படி இருக்கும்? என்று தேடவே இல்லை.

கடவுள் நேற்றும், இன்றும், என்றும் நிலையானது
புதுமையானது.

அண்டசராசரத்திற்கும் ஒரு நாயகம் இருக்கிறது.

இறைவன் உன்னை படைத்து தனக்கு ஒரு
வடிவமில்லாமல் உன்னை சிறப்பாய் வைத்திருக்கிறது.
கடவுளுக்கு ஒரு வடிவம் வேண்டுமெனில் உன்
வடிவத்தை வைத்துக் கொள்ளலாம்.

கடவுளுக்கும், செய்யப்படும் சடங்குகளுக்கும்
சம்பந்தம் இல்லை.

நம் இருப்பு எப்போதுமே வெட்டவெளியில் தான்.

எங்கு இருக்கிறீர்களோ அங்கேயே இறைவன்பால்
அன்பு கொள்ளலாம்.

உள்ளே நீதான், வெளியே நீதான்.

சூன்யத்தை தரிசித்தவர்கள் மிகக் குறைவு, சூன்யத்தை தரிசித்தவர்போல் நடித்தவர்கள் நிறையபேர்கள்.

கடவுளிடத்தில் நல்லது, கெட்டது இல்லவே இல்லை.

சூன்யத்தை அனுபவிக்க முடியும்.

நீங்கள் தமிழ் மரபில் பிறந்திருந்தால், நீங்கள் தமிழனாக இருந்தால், உங்களுக்கு தமிழ் மட்டும் தெரியும் என்றால், உங்களுக்கு தமிழ் மட்டும் புரியும் என்றால் இறைவனுடன் சேர்ந்துவிடலாம்.

எழுத்தை அறிவித்தவன் இறைவன்,
எழுந்தால் அது எழுத்து.

சூன்யத்திலிருந்து முதலில் எழுந்தது சத்தம் (நாதம்).

தமிழ் இலக்கியம், இலக்கணம் நூல்களை படித்தாலே இறைவனை அடையலாம்.

இறைவனை பூஜிக்க எந்த மொழியையும் பயன்படுத்தலாம், தமிழ் படித்தால் இறைவனுடன் இணையலாம்.

சூன்யத்தை உணர்வதற்கு ஒரு மொழி வேண்டுமெனில்
உலக மக்கள் அனைவருக்கும்
சொல்கிறேன் தமிழ் படிக்க வேண்டும்.

நீங்கள் எந்த மொழியில் பிறந்திருந்தாலும்,
தமிழ் மொழியை கற்றுக் கொண்டால்
ஞானமடைந்து விடலாம்.

இறைவனையும் தமிழையும் பிரிக்க முடியாத
அளவு செய்து வைத்திருக்கிறார்கள்.

தமிழில் உள்ள ஒவ்வொரு வார்த்தையும்
சூன்யத்தில் போய் முடியும்.

நன்றி - நான் + இன்றி
வணக்கம் - வா + இணக்கமாக இருக்கலாம்.

தமிழில் ஏதாவது ஒரு வார்த்தையை எடுத்து தியானம்
செய்தால்கூட சூன்யத்திடம் போய்விடலாம்.

தமிழில் சாதி பெயர்கள் அனைத்தும் அண்டசராசர
நாயகனிடத்தில் இருந்து வந்ததுவே.

தமிழில் ஒவ்வொரு சொல்லையும் ஆராய்ச்சி செய்தால்
இறைவனிடத்தில்போய் முடியும்.

தமிழில் அத்தனை சொல்லும் பொருள் குறித்தனவே.

சூன்யத்திலிருந்து வெளிப்பட்ட சத்தத்தை அழகுபடுத்தி
தமிழில் எழுத்துக்களாக்கி வைத்திருக்கிறார்கள்.

## அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஃ

உயிரிலிருந்து வெளிப்பட்ட எழுத்துக்கள்,
உயிர் எழுத்துக்கள்.

இறைவனை உணர்வுள்ளோர்தான் உணரமுடியும்,
அதனால் தமிழ் மொழியை உணர்வுடனே
செய்துவிட்டார்கள்.

சூன்யமான இறைவன் நமக்கு கொடுத்த மொழி தமிழ்.
நமசிவய என்ற வார்த்தை, மொழி வந்த பிறகு
வந்ததில்லை. தமிழ் மொழி தோன்றும் முன்பே
ஐம்பூதங்களுக்கு நமசிவய என்ற வார்த்தையை
வைத்து வழிபட்டிருக்கிறார்கள்.

நான் சிவமானேன்
பார்க்கப்படும் உடம்பு அனைத்தும் பெண்தான்.
கடத்திற்குள் (உடல்) வசப்பட்டு இருப்பதால் கடவுள்.

நீங்கள் ஒத்துக் கொண்டாலும், ஒத்துக்
கொள்ளாவிட்டாலும்,
நீங்கள் நம்பினாலும், நம்பாவிட்டாலும்,
நீங்கள் புரிந்து கொண்டாலும்,
புரிந்து கொள்ளாவிட்டாலும்,
கடவுள் சூன்யமாகத்தான் இருக்கிறது.

நீங்கள் இருக்கிறீர்கள் என்றால் கடவுள் இருக்கிறது.

## அதற்க்கான விளக்க நூல்கள்

**திருவள்ளுவர் கடவுளை பற்றி**

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

விளக்கம்: தமிழில் எல்லா எழுத்துக்களுக்கும் 'அ' என்ற எழுத்து எப்படி முதன்மையாக உள்ளதோ, அதைப் போல இந்த உலகிலுள்ள எல்லாப் படைப்பினங்களுக்கும் ஆதியான கடவுள் பகுபடாத வானத்தை (வெட்டவெளி) போன்று முதன்மையாக இருக்கின்றான்.

**தாயுமானவர் கடவுளை பற்றி**

பார்குமண்ட மெங்குமொரு நீக்கமற
நிறைகின்ற பரிபூர ணானந்தமே

விளக்கம்: பார்க்கும் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் ஆனந்த பரிபூராணம் ஒன்றுதான் சூன்யம்.

**மாணிக்கவாசகர் திருவாசகத்தில் கடவுளை பற்றி**

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே

விளக்கம்: கடவுள் வானாகவும், மண்ணாகவும், வளியாகவும் (காற்று), ஒளியாகவும், கோனாகவும், ஊனாகவும், உயிராகவும், உண்மையாகவும், இன்மையாகவும், அனைத்தையும் கூத்தாட்டுபவன் என்று எல்லாவற்றிலும் எல்லாமாகவும் இசை வாடிக் கொண்டு இருக்கிறான் என்று கடவுளை வரையறுக்கிறார்.

<u>கம்பன் ராமாயணத்தில் கடவுளை பற்றி</u>

உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகு இலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே

விளக்கம்: எல்லா உலகங்களையும் தாமே படைத்தலும், பாதுகாத்தலும், அழித்தலும் ஆகிய மூன்று தொழில்களையும், நீங்காத முடிவு இல்லாத விளையாட்டுகளாக உடையவராகிய அவரே, இவ்வுலகங்களுக்கு எல்லாம் தலைவன் (இறைவன்), அத்தன்மை பெற்ற இறைவனையே நான் சரணடைகிறேன்.

கம்பராமாயணத்தில் கம்பன் எழுதுவது ராமனின் கதை. அப்படி இருக்கும் பொழுது ராமனின் புகழைப் பாடித் தொடங்குவது தானே இயல்பு. ஆனால் கம்பன் தனது படைப்பின் தொடக்கத்தை இவ்வாறு துவங்குகிறார்.

கம்பன் தனது முதல் பாடலிலேயே அறியாமையில் சிக்கி ராமனைக் கடவுளாகவும், கடவுளின் அவதாரமாகவும், நம்பி பின்பற்றும் மனிதர்களுக்கு ஒரு தெள்ளத்தெளிவான விளக்கத்தை அளித்துள்ளார்.
மேற்காணும் இவரின் கடவுளைப்பற்றிய பார்வை சூன்யத்தைப்பற்றி தெளிவாக விளக்குகிறது.
ராமன் கடவுளல்ல. ராமாயணத்தில் ஒரு கதாபாத்திரம் என்பதையும், கடவுள் கதா பாத்திரங்களுக்கு அப்பாற்பட்டவன் என்பதையும் விளக்குகிறது.
கம்பன் கூறும் கடவுளைத் தவற விட்டு கதாபாத்திரத்தைக் கடவுளாக வழிபடும் மனிதர்கள் இனியாவது சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்.

<u>திருமூலர் திருமந்திரத்தில் கடவுளை பற்றி</u>

இணங்கிநின் றான்எங்கு மாகிநின் றானும்
பிணங்கிநின் றான்பின்முன் னாகிநின் றானும்
உணங்கிநின் றான்அம ராபதி நாதன்
வணங்கிநின் றார்க்கே வழித்துணை யாமே

விளக்கம்: அனைத்திலும் எங்கும் எதிலும் கலந்திருப்பவன், எல்லா வரையறைகளுக்கும் அப்பாற்பட்டவன், அனைத்தின் ஆரம்பமும் முடிவுமாக இருப்பவன், இந்த இறைவனை வணங்கினால் வெற்றி உண்டாகும் என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.
தமிழ் மொழியில் ஞானமடைந்த மனிதர்கள் மட்டுமல்லாமல் உலகில் பல்வேறு காலகட்டங்களில் வாழ்ந்த, பல்வேறு கலாச்சார பின்னணி கொண்ட

ஞானமடைந்தவர்கள், கடவுளை இவ்வாறு விளக்கியுள்ளனர்.

## புத்தர் கடவுளை பற்றி

இறைவனை உணர்த்த மனிதர்கள் கடவுளைப் பல்வேறு பெயர்களில் குறிப்பிட்டாலும் சூன்யம் என்ற சொல்லை, புத்தர் தான் முதலில் பயன்படுத்தினார். இதை முட்டாள்கள் கடவுள் இல்லை என்று தவறாகப் பொருள்படுத்திக் கொண்டனர். புத்தரின் பார்வையில் கடவுள் வரையறுக்க முடியாத ஒன்று, அது தனக்கென தனி வடிவமற்றது. இதை உணராத அறிவீனர்கள் கடவுளை ஏற்றுக்கொள்ள முடியாமல் தவிக்கின்றனர்.

## முகம்மது நபி கடவுளை பற்றி

முகமது நபி சிலை வழிபாடு செய்து வந்த சமூகக்கூட்டத்தின் பின்னணியில் தோன்றினாலும், தனது நாற்பதாவது வயதில், இரண்டு ஆண்டுகள் ஹீரா குகையில் இறைவனைப்பற்றிய தனது தனிமைத் தேடலின் முடிவாக, கடவுள் நிகரற்றது என்று வரையறுத்தார்.

## கிறிஸ்துவம்(பைபிள்) கடவுளை பற்றி

பரமபிதா நித்திய ஜீவனாக (அழியாத நிலைத்த ஜீவனாக) உள்ளார் என பைபிளில் குறிப்பிடுகிறார்கள். பரமபிதா என்ற சொல்லை நாம் பிரித்தால்

(பரம் - எங்கும் வியாபித்து, பரவியுள்ள ஒன்று), பிதா என்ற சொல்லுக்கு (முதன்மையானவன், இறைவன் எனப் பொருள்) இதையே தமிழ் கூறும் நல்லுலகம் கடவுளை பரம்பொருள் எனப் போற்றுகிறது. இந்த உண்மை உணராத ஆன்மீக வியாபாரிகள் மனிதனைக் கடவுளாக மெருகேற்றிப் பணம் குவித்துக் கொள்கின்றனர்.

## ஔவையார் அவர்களுக்கு நடந்த சம்பவம்

ஔவையார் தமிழ் தொண்டாற்றியது மட்டுமல்லாமல் இறைவனை உணர்ந்து, மற்றவர்களும் கடவுளை உணர உபதேசம் செய்து வந்துள்ளார். இவ்வாறான அவரது பயணத்தின்போது, இளைப்பாற கோயில் முன் தன் கால்களை நீட்டி ஓய்வெடுக்கும் தருணத்தில் அக்கோயிலின் பூசாரி, "ஏய் கிழவியே, கடவுள் இருக்கும் கோயிலின் திசையில் நீ உன் கால்களை நீட்டி இளைப்பாறுகிறாயே, இது சரியா?" என வினவ, ஔவையாரோ, "நீ சொல்வது சரிதான் பூசாரியே,அப்படியானால் கடவுள் இல்லாத திசையைச் சொல். நான் அந்தப் பக்கம் என் கால்களை நீட்டிக் கொள்கிறேன்" என வினவ பூசாரி திக்குமுக்காடிப் போனான். உண்மையை உணர்ந்த பூசாரி ஔவையரை வணங்கி உபதேசம் பெற்றதாக வாய்வழி கதைகளுண்டு. இது கதையாக இருப்பினும் கடவுள் எல்லாத்திசைகளிலும் இருக்கிறான் என்பதை உணர்த்துகிறது.

**மேற்காணும் கடவுளைப் பற்றிய உண்மைகளைப் பகுத்து அறியும் அறிவையே பகுத்தறிவு எனப்படும். சூன்யத்தை அறியும் வாய்ப்பும், வல்லமையும் பகுத்தறிவு கொண்ட மனிதனுக்கு மட்டுமே சாத்தியமான ஒன்றாக உள்ளது.**

**இருட்டுமில்லா, வெளிச்சமுமில்லா ஒரு நிரந்தரமான அமைதியில் உள்ளது நாதம்.**

**யார் தியானம் செய்கிறார்களோ, யார் கடவுளின்பால் அன்பாய் இருக்கிறார்களோ,
யார் முயற்சி செய்கிறார்களோ அவன் சூன்யத்தை அடைகிறான்.**

**இறைவனை உணர பலம், ஆரோக்கியம் தேவை.**

**உங்கள் புலன்களை சரி செய்யவே பயிற்சி.**

**கடவுள் தெரிந்து கொள்ள பணம்
ஒரு விஷயமா?
படைத்ததை தெரிந்து கொள்ள பணம்
ஒரு விஷயமா?**

**கடவுள் நிர்மலனாய், நிர்குணனாய், பரப்பிரம்மமாய், எங்குமாய், சர்வேஸ்வரனாய் இருக்கிறது.
அது இல்லாத இடமே இல்லை.**

ஏனென்றால் உங்கள் இதயத்தை துடிக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

இறைவன்பால் அன்பு வைக்கின்ற, கடவுளை நேசிக்கின்ற மனிதனின் வாழ்க்கை சிறப்பாகத்தான் இருக்கும்.

சூன்யத்தை அனுபவிக்கும் முயற்சியின் பெயர்தான் "யோக சாதனை".

நீங்கள் உங்களை சிறப்பாக வைத்துக்கொண்டால், கடவுளை சிறப்பாக வைத்துக் கொள்கிறீர்கள்.

## NOTHINGNESS (SOONIYAM)

**State of GOD is NOTHINGNESS.**

**GOD is present in all the time of present, past and future.**

**Very few people have interest of knowing GOD, than getting valuable things.**

**To explain in detail,GOD means create (Generate), protect (Organise) and Destroy.**

**GOD does not change in any situation.**

**GOD is the almighty for all the creatures in the universe.**

**GOD does not have any structure, if you need one you can have your body.**

**GOD does not have any resemblance though he keeps us better always.**

**There is no need of religious practices to know GOD.**

**We all are inside the Nothingness only.**

**You can pray GOD by whenever and wherever you are.**

**GOD is inside and outside us.**

**People who reached NOTHINGNESS (ENLIGHTMENT) is less, but pretended to be a saint is very high.**

**GOD does not have any restriction on good or bad.**

**Everyone can reach the state of Nothingness.**

**If you can speak the TAMIL language, the attaining of Nothingness is a easy way.**

**The one who found the letters where GOD (According to tamil language).**

**The sound that arrived in the first, from Nothingness is (NATHAM) GOD SOUND.**

**You can use any language to speak with GOD, but to reach that state. You need to know TAMIL.**

**The easiest way to attain Nothingness is to learn the TAMIL language first.**

**The GOD and the TAMIL language cannot be seperated.**

**All the words in TAMIL language will endup with the meaning to reach GOD (NOTHINGNESS).**

**If one have done meditation with any word in TAMIL, he can attain Nothingness.**

**All the caste name are directed to the Nothingness.**

**The letter in the TAMIL language are beautifully created.**

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| a | aa | i | ii | u | uu | e | ae | ai | o | oa | ow | q |

**Even if you agree or not, the GOD is NOTHINGNESS. If you are present, the GOD is present.**

**References given for GOD**

**<u>GOD in view of Thiruvalluvar</u>**

**Agara muthala eluthellam aathi**
**Bagavan muthatre ulagu**

**Explanation: Just as the letter □ (a) is the primary word of Tamil language, likewise the God is primary for all the creatures in this world, Is in the state of undivded space (Sooniyam).**

**<u>Thayumanavar view of GOD</u>**

**Paarkumanda mengumoru neekamara**
**niraikindra Paripooranaanthame**

**Explanation: Wherever we look he is the only one who is wide spread in all the places, which is NOTHINGNESS.**

**Maanikkavasagam describes GOD as follows**

**Vaanaagi, mannaagi,**
**Valii aagi, oliaagi,**
**Oon aagi, uyiraagi,**
**Onmayum aai, inmayumaai,**
**Konaagi, yaanenathuendru**
**Avaravaraik koothattu**
**Vaanaagi nindra aai**
**Ensolli vaalthuvane**

**Explanation: God is the sky, soil, Air, Light, King, Body, Soul, Reality, Creator, destroyer and controller of all things, It is being said that God is present in each and everything, and everywhere.**

**Kamban view of GOD**

**Ulagam yavaium thaam ula aakilum**
**Nilai peruthalum neekalum neengala**
**Alagu ila vilaiaattu udaiyaar avar**
**Thalaivar annavarakke sarann naangale**

**Explanation: God is one who does all three jobs of creating**

the whole world, safeguarding and even destroying it.
Like a non-ending game. He is the endless game,
I surrender to the God of all these worlds
who is unique. The story of Raman
is written by Kamban in the Kambaramayanam.
It is natural to begin singing the praises of Raman,
But Kamban begins his work with the following.
In his first song, Kamban gives a clear explanation
to the people who are stuck in ignorance and
believe in Raman as God, that he incarnated raman
as God. His vision of God above clearly explains the
Sooniyam. Also, note that Raman is just a character
in the Ramayana, It also explains that God is beyond
characters, People mistook the message of Kamban
about Sooniyam and started worshipping Rama.
Raman is a character, People should start thinking
over this and act correctly at least hereafter.

## Thirumoolar view of GOD in Tirumanthram

Inanginindrangum maaginin atranum
Pinanginindrapin munnakinindranum
Unanginindraan ama rapathi naathan
Vananginin draarke valithunai yaame

Explanation: He is everywhere, beyond all limits, he is
the beginning and end of all things, Thirumoolar notes
that worshipping the God is a victory, Not only men who

were enlightened in the Tamil language, but also those who lived in different cultures of different ages in the world, have described God as such.

## Buddha view of GOD

Many people who understood God have named it in different forms, But Buddha was the first to name GOD as SOONIYAM (NOTHINGNESS).
Many foolish people mistook Sooniyam-nothingness as No God. In the Buddha's view, God is indescribable. The ignorant people who do not realize this are unable to accept God.

## Prophet Mohammed view of GOD

He was from a family which worshipped idols, Despite being from such a family, at the age of forty years he went into isolation at the Mount Hira. There he gained knowledge of god and here came the end of his quest for GOD, and described it as NOTHINGNESS.

## Christianity (Bible) view of GOD

John 1-1
"In the beginning was the word, and the word was with GOD, and the word was god."

This shows the NATHAM (GOD SOUND) came from SOONIYAM (NOTHINGNESS).

**John 14-11**

**"I am in my father, and you in me, and I in you"**

**These words explain the GOD is present everywhere.**

## Avvayar incident of explaning GOD

**She didn't just play a role in developing Tamil, but also gave Ubadesam Guidance to understand GOD. During the journey of hers, she was travelling and reached a temple for a rest. As she was tired she sat and straightened her feet , At that moment the temple priest came and shouted at her saying that she has straightened her legs in the direction of GOD. For which she replied, you are right, Now show me the direction where GOD doesn't exist, so that I can straighten my legs in that direction. The priest became speechless at this, as there is no place where GOD can't exist. There are stories which say that he bowed in front of Avvayar and got ubadesam. Even though these are just stories, they denote the same concept that god is present everywhere in all directions. Than the knowledge about knowing GOD, the opportunity and power to know the sooniyam is possible only for a rational people. You can gain clarity and knowledge of the Sooniyam, but knowing the Sooniyam and enjoying it, is different. Knowledge of the Sooniyam can be brought out of the darkness, by coming out of their religious rituals,**

**religious observances, and deities. But it is not the same as feeling the Sooniyam. After discovering the Sooniyam the quality of yourself and life will improve. The process of attaining Sooniyam is called as "yoga sathanai".**

**By keeping yourself happy you can attain NOTHINGNESS (SOONIYAM).**

# குறிப்பு

**சத்சங்கம்** : பிரதி வாரம் ஞாயிறு மாலை 5.00 மணி முதல் 9.00 வரை, உங்கள் அனைத்து ஆன்மீகக், கேள்விகளையும் அச்சமின்றி கேட்கலாம்.

## உபதேசம்

3 வித உபதேசம்
மெய்ப்பொருள் உபதேசம்
மறைபொருள் உபதேசம்
பிரம்ம உபதேசம்

5 வகை பயிற்சிகள்
தக்கன் வேள்வி
ஞானக் குளியல்
மந்திர முயற்சி
உயிரெழுத்து ஓதல்
யோக நித்திரை

## வாழ்வியல் வகுப்புகள்

எனக்காக 40 நாட்கள்
நிமிர்ந்து நில்
பார்த்துப் பழகு
ஊக்கமது கைவிடேல்
காலம் உன் கையில்
ஆனந்த வாழ்வு

## வங்கி விபரம்

YOGAKUDIL TRUST
AXIS BANK LTD
A/C - 920010038927038
IFSC - UTIB0001565
A/C TYPE - SAVINGS
BRANCH - VILLIVAKKAM


YOGAKUDIL
sivayogi_
@yogakudil
SIVAYOGI

PHONE : +91 9710230097
www.yogakudil.org

யோகக்குடில் எண்.8, அன்னை இந்திரா நகர், புத்தகரம், சென்னை-600099.